வெள்ளக்கோவில் நகராட்சி நிர்வாகத்திடம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மனு

நகராட்சி மேலாளர் மாயகண்ணனிடம் மனு அளித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர்.

வெள்ளக்கோவில், ஜூலை 6: வெள்ளக்கோவில் நகராட்சி நிர்வாகத்திடம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மனு அளித்தனர்.

நகராட்சி மேலாளர் மாயகண்ணனிடம், கட்சியின் நகர கிளைச் செயலாளர் எம்.சரவணகுமார் தலைமையில் திங்கள்கிழமை அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: நகராட்சிக்கு உள்பட்ட உப்புப்பாளையம் பிரதான சாலையில் தனியார் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்கு இடையூறாக தெரு நாய்கள், வளர்ப்பு ஆடுகள் சுற்றித்திரிகின்றன. அதே சாலையில் ஒரு திருமண மண்டபத்தில் மீதமாகும் உணவுகளை கொட்டுவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு வருகிறது.

மேலும் உப்புப்பாளையம் சாலையில் கோயில், பள்ளிக் கூடம், குடியிருப்புப் பகுதிக்கு அருகே உள்ள தனியார் மதுபானக் கடையை ஒதுக்குப்புறமான இடத்துக்கு மாற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் காங்கயம் தாலுகா குழு உறுப்பினர்கள் பி.கருப்புசாமி, ஆர்.செல்வராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது தவெக அரசு

வைகோ பேட்டி

பல்லடம் அருகே வலையபாளையத்தில் சீமைக் கருவேல மரங்களை அகற்றும் நிகழ்வில் பங்கேற்ற மதிமுக பொதுச்செயலாளர் வைகோ.

பல்லடம், ஜூலை 6: தமிழகத்தில் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது தவெக அரசு என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே வலையபாளையத்தில் திருப்பூர் புறநகர் வடக்கு மாவட்ட மதிமுக சார்பில் சீமைக் கருவேல மரங்களை அகற்றும் நிகழ்வு திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கலந்து கொண்டு சீமைக் கருவேல மரத்தின் தீமைகள் குறித்தும் அவை அகற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்கிப் பேசினார்.

இதைத் தொடர்ந்து சீமைக்கருவேல மரங்களை அகற்றும் பணிகளைத் தொடங்கிவைத்த அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கர்நாடகத்தில் மேக்கேதாட்டு அணை கட்டப்பட்டால் தமிழகத்தில் 28 மாவட்டங்களுக்கு தண்ணீர் கிடைக்காது. அணைக் கட்டும் விவகாரத்தை பின்னணியில் இருந்து மத்திய அரசு ஊக்குவிக்கிறது.

குதிரை பேரம் என திமுக விமர்சிக்கிறது. எங்கள் கட்சியினரை திமுக சின்னத்தில் நிற்கவைத்து தங்களுடன் சேர்த்துக் கொண்டதுதான் குதிரை பேரம். ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது தவெக அரசு. ஊழலை வேருடன் பெயர்ந்து எறியும் அரசாக உள்ளதால் நாங்கள் தவெகவை ஆதரிப்போம்.

தமிழகத்தில் முதல்வர் ஜோசப் விஜய் அரசுக்கு பாதுகாப்பு அளிப்போம். ஆளுநர் ஆட்சியைக் கொண்டு வந்து பாஜக ஆட்சி நடத்தலாம் என பகல் கனவு கண்டார்கள். அதனை முறியடித்துள்ளோம். தவெக ஆட்சியை அகற்ற தலைகீழாக நின்று பார்க்கிறார்கள். அது எப்போதும் முடியாது.

அடுத்த 6 மாதங்களில் முதல்வர் ஜோசப் விஜய் அரசியல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் அதீத நிபுணத்துவம் வாய்ந்தவராகத் திகழ்வார். வரும் இடைத்தேர்தலில் மதிமுக போட்டியிடாது என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மதிமுக அவைத் தலைவர் அர்ஜுனராஜ், முன்னாள் எம்.பி. மருத்துவர் கிருஷ்ணன், மாவட்டச் செயலாளர் புத்தரச்சல் பி.கே.மணி, மாவட்ட நிர்வாகிகள் காவீ.பழனிசாமி, ஆர்.ஆர்.ரவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தாராபுரத்தில் நாளை மின்நுகர்வோர் குறைதீர் கூட்டம்

தாராபுரம், ஜூலை 6: திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் புதன்கிழமை (ஜூலை 8) நடைபெறவுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு மின்வாரிய தாராபுரம் கோட்ட செயற்பொறியாளர் ஆர்.கேசவராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தாராபுரம் கோட்டத்தில் ஜூலை மாதத்துக்கான மின்நுகர்வோர் குறைதீர் கூட்டம் தாராபுரத்தில் உள்ள மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் புதன்கிழமை (ஜூலை 8) முற்பகல் 11 மணிக்கு நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் மின் பயனீட்டாளர்கள் கலந்து கொண்டு தங்களின் குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தை சேர்ந்த 2 பேருக்கு தலா 2 ஆண்டுகள் சிறை

திருப்பூர், ஜூலை 6: திருப்பூர் மாநகரில் சட்ட விரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தைச் சேர்ந்த 2 பேருக்கு தலா 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

திருப்பூர் மாநகர், வீரபாண்டி காவல் நிலைய எல்லைக்கு உள்பட்ட கருப்பகவுண்டம்பாளையம் பகுதியில் வீரபாண்டி காவல் நிலைய போலீஸார் 2025 மார்ச் 25-ஆம் தேதி சோதனை செய்து கொண்டிருந்தனர். அப்போது அங்கே சந்தேகத்துக்கு இடமாக நின்று கொண்டிருந்த ரோபி (35) மற்றும் இசாக் அலி (25) ஆகியோரைப் பிடித்து விசாரித்தனர். அவர்கள் சட்ட விரோதமாக வங்கதேசத்தில் இருந்து திருப்பூர் வந்து தங்கி வேலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து 2 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த திருப்பூர் 2-ஆவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி கனகராஜ் திங்கள்கிழமை தீர்ப்பளித்தார். அதில் ரோபி மற்றும் இசாக் அலி ஆகிய 2 பேருக்கும் தலா 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், தலா ரூ.10,000 அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார். இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்குரைஞர் பூமதி ஆஜரானார்.

பெருமாநல்லூர் அருகே எரிவாயு கொண்டுச் சென்ற லாரியில் கசிவு

அவிநாசி, ஜூலை 6: பெருமாநல்லூர் அருகே சிஎன்ஜி எரிவாயு கொண்டுச் சென்ற லாரியில் எரிவாயு கசிவு ஏற்பட்டதால், சேலம்–கொச்சி தேசிய நெடுஞ்சாலையில் பரபரப்பு ஏற்பட்டது.

லாரியில் ஏற்பட்ட எரிவாயு கசிவு.

திருப்பூரில் இருந்து சிஎன்ஜி எரிவாயு ஏற்றுக்கொண்டு ஈரோடு நோக்கி சேலம்–கொச்சி தேசிய நெடுஞ்சாலையில் லாரி சென்று கொண்டிருந்தது. லாரியை ஈரோடு பகுதியைச் சேர்ந்த சுந்தர்ராஜ் (54) என்பவர் ஓட்டிச் சென்றார்.

பெருமாநல்லூர் ஆதியூர் பிரிவு அருகே லாரி சென்றபோது சிஎன்ஜி எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளது. இதையறிந்த ஓட்டுநர் உடனடியாக வாகனத்தை நிறுத்தி தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற திருப்பூர், ஊத்துக்குளி தீயணைப்புத் துறையினர், பாதுகாப்பு உபகரணங்களுடன் எரிவாயு கசிவை சரி செய்தனர். இதனால் தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

சேவூர் அருகே நாய்கள் கடித்து 3 ஆடுகள் உயிரிழப்பு

அவிநாசி, ஜூலை 6: சேவூர் அருகே பாப்பாங்குளத்தில் தெருநாய்கள் கடித்ததில் 3 ஆடுகள் திங்கள்கிழமை உயிரிழந்தன.

சேவூர் அருகே பாப்பாங்குளம் ஊராட்சிப் பகுதியில் வசித்து வருபவர் சென்னியப்பன் மகன் வெற்றிவேல் (60). இவர், ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடை வளர்ப்பையே வாழ்வாதாரமாக கொண்டுள்ளார். இந்நிலையில் தனது வீட்டின் அருகே உள்ள தோட்டத்தில் ஆடுகளை திங்கள்கிழமை மேய்த்து கொண்டிருந்தார்.

அப்போது அப்பகுதிக்குள் புகுந்த தெருநாய்கள் ஆடுகளை கடித்து காயப்படுத்தின. இதைப் பார்த்த பொதுமக்கள் உள்ளிட்டோர் காயமடைந்த ஆடுகளுக்கு முதலுதவி அளித்தனர். இருப்பினும் 3 ஆடுகள் உயிரிழந்தன. மேலும் காயமடைந்த ஒரு ஆட்டுக்கு மட்டும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது: கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக முதலிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வெறிநாய்கள் அதிக அளவில் சுற்றி வருகின்றன. இது தோட்டம், காடுகளில் மேய்ந்து கொண்டிருந்த 10-க்கும் மேற்பட்ட ஆடு, மாடு உள்ளிட்டவற்றை கடித்துள்ளன. கால்நடை வளர்ப்பு அதிகம் உள்ள எங்கள் பகுதியில் சுற்றித்திரியும் வெறிநாய்களை பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

கனரா வங்கி Canara Bank

பொன்னாபுரம் கிளை (8996) : 111, தாசரபட்டி, பொன்னாபுரம், பொள்ளாச்சி-தாராபுரம் மெயின் ரோடு, தாராபுரம் - 638657, போன் எண்.9489043952, 9597310042.

தங்க நகை ஏல அறிவிப்பு (ஆன்லைன்)

எங்களது வங்கிக் கிளையில் கீழ்க்கண்ட நபர் தங்க நகைகளை அடமானம் வைத்து, கடன் பெற்று இதுநாள் வரை கடனை திரும்பச் செலுத்தாமல், சாதாரண தபால் மூலமும், பதிவு தபால் மூலமும் இதுபற்றி தெரிவித்தும் நகைகளை மீட்கவில்லை. ஆகவே இந்த விளம்பரம் கண்டவுடன் அசல், வட்டி, தபால், விளம்பரச் செலவுகள் சேர்த்து **21.07.2026** தேதிக்குள் பணத்தைச் செலுத்தி நகைகளை மீட்டுக் கொள்ளவும். தவறும் பட்சத்தில் **22.07.2026ந் தேதி பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 4.00 மணி** வரை ஆன்லைன் மின் ஏல முறையில் **(ONLINE E-AUCTION)** நகைகளை பகிரங்க ஏலத்தில் விடப்படும். கடன்தாரர் இறந்திருந்தால் அன்னாரது வாரிசுதாரர்களுக்கும், வெளியூர் மற்றும் வெளிநாடுகளுக்கு சென்ற கடன்தாரருக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத்தொகை கடன் நிலுவை தொகைக்கு குறைவாக இருந்தால், மீதித் தொகையை வசூலிக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஏலத்தொகை கடன் நிலுவைக்கு கூடுதலாக பெறப்பட்டால், கடன்தாரரிடம் திருப்பி அளிக்கப்படும் அல்லது அன்னாரது வேறு தவணை தவறிய கடன்களுக்கு வரவு வைக்கப்படும். ஏலத்தை மறு அறிவிப்பின்றி ஒத்திவைக்கவோ, ஏலத்தேதியை மாற்றுவதற்கோ, ரத்து செய்யவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு.

வ.எண்.	நகை கடன் எண்	கடன்தாரரின் பெயர் மற்றும் முகவரி	கடன்தாரரின் மொத்த நிலுவைத் தொகை வட்டியுடன்
1.	180422494570	சையத் பாத்திமா அப்துல் ஹக்கிம், த/பெ. அப்துல் ஹக்கிம், 583, பாண்டியன் நகர், சிவகிரிப்பட்டி, திண்டுக்கல், பழனி, தமிழ்நாடு – 624 601.	ரூ.13,37,466.45
2.	180435344974		

ஏலத்திற்கான தேதி மற்றும் நேரம் : 22.07.2026 பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
[5 நிமிட நிபந்தனையற்ற நேர நீட்டிப்புடன் விற்பனை முடியும் வரை]

ஏல முன்வைப்புத் தொகையை 21.07.2026 மாலை 4.00 மணிக்குள் செலுத்தி விண்ணப்ப படிவத்தை வங்கி மேலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து நகைகள் ஏல அதிகரிப்புத் தொகை ரூ.1,000/– | ஏல முன் வைப்புத் தொகை ரூ.25,000/–

மேலே விவரிக்கப்பட்டுள்ள நகைகளை **21.07.2026 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிக்குள்** வங்கி கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம்.

சேவை வழங்குநர் : தொடர்பு எண் : 96861 96751 / 97319 67722, M/s.Antares Systems Limited – helpdeskcanbank@gmail.com

தேதி : 06.07.2026 / இடம் : பொன்னாபுரம் — கிளை மேலாளர், கனரா வங்கி, பொன்னாபுரம் கிளை

கனரா வங்கி Canara Bank

குண்டடம் கிளை (1242) : எண்.1213/1C, கோயம்புத்தூர் ரோடு, குண்டடம், திருப்பூர் மாவட்டம் - 638 702, மொபைல் : 94890 43443, மின்னஞ்சல் : cb1242@canarabank.com

தங்க நகை ஏல அறிவிப்பு (ஆன்லைன்)

எங்களது வங்கிக் கிளையில் கீழ்க்கண்ட நபர் தங்க நகைகளை அடமானம் வைத்து, கடன் பெற்று இதுநாள் வரை கடனை திரும்பச் செலுத்தாமல், சாதாரண தபால் மூலமும், பதிவு தபால் மூலமும் இதுபற்றி தெரிவித்தும் நகைகளை மீட்கவில்லை. ஆகவே இந்த விளம்பரம் கண்டவுடன் அசல், வட்டி, தபால், விளம்பரச் செலவுகள் சேர்த்து **22.07.2026** தேதிக்குள் பணத்தைச் செலுத்தி நகைகளை மீட்டுக் கொள்ளவும். தவறும் பட்சத்தில் **23.07.2026ந் தேதி பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி** வரை ஆன்லைன் மின் ஏல முறையில் **(ONLINE E-AUCTION)** நகைகளை பகிரங்க ஏலத்தில் விடப்படும். கடன்தாரர் இறந்திருந்தால் அன்னாரது வாரிசுதாரர்களுக்கும், வெளியூர் மற்றும் வெளிநாடுகளுக்கு சென்ற கடன்தாரருக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத்தொகை கடன் நிலுவை தொகைக்கு குறைவாக இருந்தால், மீதித் தொகையை வசூலிக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஏலத்தொகை கடன் நிலுவைக்கு கூடுதலாக பெறப்பட்டால், கடன்தாரரிடம் திருப்பி அளிக்கப்படும் அல்லது அன்னாரது வேறு தவணை தவறிய கடன்களுக்கு வரவு வைக்கப்படும். ஏலத்தை மறு அறிவிப்பின்றி ஒத்திவைக்கவோ, ஏலத்தேதியை மாற்றுவதற்கோ, ரத்து செய்யவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு.

வ.எண்.	நகை கடன் எண்	கடன்தாரரின் பெயர் மற்றும் முகவரி	நிலுவைத் தொகை வட்டியுடன்
1.	180146682548	கன்னி, த/பெ.முத்தன், அம்மாபாளையம், MG பாளையம், தாராபுரம், தமிழ்நாடு – 638 702.	ரூ.97,066.19

ஏலத்திற்கான தேதி மற்றும் நேரம் : 23.07.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
[5 நிமிட நிபந்தனையற்ற நேர நீட்டிப்புடன் விற்பனை முடியும் வரை]

ஏல முன்வைப்புத் தொகையை 22.07.2026 மாலை 4.00 மணிக்குள் செலுத்தி விண்ணப்ப படிவத்தை வங்கி மேலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து நகைகள் ஏல அதிகரிப்புத் தொகை ரூ.1,000/– | ஏல முன் வைப்புத் தொகை ரூ.25,000/–

மேலே விவரிக்கப்பட்டுள்ள நகைகளை **22.07.2026 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிக்குள்** வங்கி கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம்.

சேவை வழங்குநர் : தொடர்பு எண் : 96861 96751 / 97319 67722, M/s.Antares Systems Limited – helpdeskcanbank@gmail.com

தேதி : 06.07.2026 / இடம் : திருப்பூர் குண்டடம் — கிளை மேலாளர், கனரா வங்கி, திருப்பூர் குண்டடம் கிளை

பாரத ஸ்டேட் பாங்கு

வீட்டுக்கடன் மையம், திருப்பூர்
ஈஸ்வரன் ஆர்கேட், முதல் தளம், 544, பல்லடம் மெயின் ரோடு, எதிர் சுலோச்சனா மில்ஸ், தென்னம்பாளையம், திருப்பூர் 641 604

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
(அசையா சொத்து குறித்து)

வங்கியின் கீழ் வசூலிக்கப்படும் அசையும் / அசையா சொத்துக்களை விற்பனை செய்தல் நிதிச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம், 2002 அமலாக்கம்.

பாரத ஸ்டேட் வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக கையெழுத்திடப்பட்ட இவர் **20.05.2025** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டு, **01.11.2025** அன்று சர்ஃபாசி சட்டத்தின் பிரிவு 13 (4) இன் கீழ் பின்வரும் சொத்துக்களை கையகப்படுத்தியுள்ளார்.

வங்கியின் நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்ட வழக்குகளில் வசூலிக்கப்பட்ட சொத்துக்களின் மின்னணு ஏலம் (சர்ஃபாசி சட்டம், 2002 இன் கீழ்) "இருந்தது இருந்தபடி, உள்ளது உள்ளபடி" என்ற அடிப்படையில் நடத்தப்படும் என்று பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. கடன் வாங்கியவரின் பெயர்: **திருமதி S. நந்தினி, 18, பகவதி நகர் 3வது தெரு, முருகம்பாளையம், திருப்பூர் 641 687. சொத்து விற்பனை செய்யப்படும் நிலுவைத் தொகை 31.10.2025 நிலவரப்படி ரூ. 25,14,717/- (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து பதினான்காயிரத்து எழுநூற்று பதினேழு மட்டும்) (வீட்டுக் கடன் கணக்கு 42623704600 - ரூ. 24,69,436/- சுரக்ஷா கணக்கு எண் 42626931685 - ரூ. 45,281/-)** மேலும் அதற்கான வட்டி, செலவுகள் மற்றும் இதர கட்டணங்களுடன்.

சொத்து விவரம்

திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் கணபதிபாளையம் கிராம ஊராட்சி வாரியம், கணபதிபாளையம் கிராமத்தின் எல்லைக்குட்பட்ட நிலம் மற்றும் குடியிருப்பு கட்டடம், **G.S.No 56/2** உள்ள 2.10 ஏக்கர் (அல்லது) 0.850 ஹெக்டேர் அளவுள்ள காணிகள் பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளன:- கிழக்கிலிருந்து கீழே குறிப்பிடப்பட்ட காணிகள் **G.S.No 55/4** உள்ள **0.93 ¼** ஏக்கர் நாராயணசாமி கவுண்டருக்கு சொந்தமான நிலம் **G.S.No 56/3** உள்ள மேற்கு, வடக்கே **S.R.**இராமலிங்கம் மற்றும் பிறருக்கு சொந்தமான நிலம் **G.S.No 57** -ல் மேற்கில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் 0.16 ஏக்கர் அளவுள்ள **G.S.No 56/1C** -ல் இதற்கு மத்தியில் 2.10 ஏக்கர் (அல்லது) 0.850 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட காணிகள். மேலும், அதே கிராமத்தில் **G.S.No 56/1C** உள்ள 0.16 ஏக்கர் (அல்லது) 0.065 ஹெக்டேர் அளவுள்ள நிலம் பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: கிழக்கே, **G.S.No 55/4**-ல் உள்ள 0.93 ஏக்கர் பரப்பளவுள்ள கீழ்க்கண்ட நிலத்தின் ஒரு பகுதி மற்றும் ஜி.எஸ். எண் **55/3B**-ல் உள்ள 0.06 ஏக்கர் பரப்பளவுள்ள கீழ்க்கண்ட நிலம், மேற்கே, **G.S.No 56/3**-ல் உள்ள நாராயணசாமி கவுண்டருக்குச் சொந்தமான நிலம், வடக்கே, **G.S.No 56/2**-ல் உள்ள 2.10 ஏக்கர் பரப்பளவுள்ள மேலே குறிப்பிடப்பட்ட நிலங்கள், தெற்கே, **G.S.No 56/1B** -ல் உள்ள 0.16 ஏக்கர் பரப்பளவுள்ள கீழ்க்கண்ட நிலம்: இதற்கு மத்தியில் உள்ள 0.16 ஏக்கர் நிலம். மேலும், **G.S.No 55/4B** நிலத்தில் உள்ள 2.76 ஏக்கர் (அல்லது) 1.120 ஹெக்டேர் நிலப்பரப்பில், பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள **0.93¼** ஏக்கர் (அல்லது) 0.380 ஹெக்டேர் நிலம். கிழக்கே, செந்தில்குமார் மற்றும் பிறருக்குச் சொந்தமான **0.93 ¼** ஏக்கர் நிலம், மேற்கே, **G.S.No 56/2**-ல் உள்ள மேற்கூறிய 2.10 ஏக்கர் நிலம் மற்றும் **G.S.No 56/1C**-ல் உள்ள மேற்கூறிய 0.16 ஏக்கர் நிலம், வடக்கே, **G.S.No 57** -ல் உள்ள எஸ்.ஆர். ராமலிங்கத்திற்குச் சொந்தமான நிலம் மற்றும் தெற்கே, **G.S.No 55/3B2** -ல் உள்ள கீழே குறிப்பிடப்பட்ட **0.06 ¾** ஏக்கர் நிலம் இவற்றின் மத்தியில் அமைந்துள்ள **0.93 ¼** ஏக்கர் (அல்லது) 0.380 ஹெக்டேர் நிலம். மேலும், அதே கிராமத்தில், **G.S.No 56/1B**-இல் அமைந்துள்ள, பின்வரும் எல்லைகளுக்குள் அடங்கிய 0.16 ஏக்கர் (அல்லது) 0.065 ஹெக்டேர் நிலம்: தெற்கே, **G.S.No 56/1A** -இல் உள்ள நிலம், வடக்கே, **G.S.No 56/1A** -இல் உள்ள மேற்கூறிய 0.16 ஏக்கர் நிலம், மேற்கே, **G.S.No 56/3** -இல் உள்ள நாராயணசாமி கவுண்டர் மற்றும் பிறருக்குச் சொந்தமான நிலம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள **0.06 ¾** ஏக்கர் நிலத்திற்கு கிழக்கே: இதற்கு மத்தியில் 0.16 ஏக்கர் (அல்லது) 0.065 ஹெக்டேர் நிலம், மேலும், அதே கிராமத்தில், **G.S.No 55/3B2**-இல் அமைந்துள்ள, பின்வரும் எல்லைகளுக்குள் அடங்கிய 0.15 ஏக்கர் (அல்லது) 0.065 ஹெக்டேர் நிலம்: அதே நில அளவைப் புலத்தில் கிழக்கே கிழக்கு-மேற்குப் பாதை (பகுதி) தெற்கே **G.S.No 55/3A** -இல் உள்ள நிலம், வடக்கே **G.S.No 55/4**-இல் உள்ள மேலே குறிப்பிடப்பட்ட **0.93 ¼** ஏக்கர் நிலங்கள், மேற்கே **G.S.No 56/1B** மற்றும் **56/1C**-இல் உள்ள மேலே குறிப்பிடப்பட்ட 0.16 ஏக்கர் நிலம்: இதற்கு மத்தியில் உள்ள **0.06 ¾** ஏக்கர் (அல்லது) 0.025 ஹெக்டேர் நிலங்கள். இவ்வாறு, 3.42 ஏக்கர் (அல்லது) 1.385 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட மொத்த நிலமும் வீட்டு மனைகளுக்கான தளவமைப்பாக உருவாக்கப்பட்டு, "ஸ்ரீ அங்காரகா அவென்யூ" எனப் பெயரிடப்பட்டது. மேலும், திருப்பூர் மண்டல நகர மற்றும் கிராம திட்டமிடல் உதவி இயக்குநரால், ஒப்புதல் எண் மா.வ / நா.ஊ (ரீ.மா) எண் 32/2019 மூலம் இது அங்கீகரிக்கப்பட்டது. இந்தத் தளவமைப்புத் திட்டத்தின்படி, மேற்கண்ட நிலங்களின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள, பின்வரும் எல்லைகள் மற்றும் அளவுகளைக் கொண்ட, 875 சதுர அடி பரப்பளவுள்ள, மனை எண் 20 கொண்ட ஒரு நிலப்பகுதி: வடக்கில் 20 ஆம் எண் மனையின் (தெற்குப் பகுதி) நிலம், தெற்கில் 19 ஆம் எண் மனையின் நிலம், கிழக்கில் 10.00 மீட்டர் அகலமுள்ள மனை நிலம், மேற்கில் 21 ஆம் எண் மனையின் நிலம் இதன் வடக்குப்புறம் கிழக்கு-மேற்காக 35 அடி, தெற்குப்புறம் கிழக்கு-மேற்காக 35 அடி, மேற்குப்புறம் தெற்கு-வடக்காக 25 அடி, கிழக்குப்புறம் தெற்கு-வடக்காக 25 அடி மற்றும் வடகிழக்கு மூலையில் குறுக்காக 10 அடி, ஆக மொத்தம் 875 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடம் (சமீபத்திய வருவாய்த் துணைப்பிரிவின்படி, மேற்கண்ட நிலம் பட்டா எண் 1966-இல் உள்ள 0.6016 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட **G.S.No 56/2A1A1A1A** நிலத்தில் அமைந்துள்ளது) மற்றும் சொத்தை அடைவதற்கு மனைப்பிரிவுச் சாலைகளைப் பயன்படுத்தும் உரிமைகளும் சகிதம்.

ரிசர்வ் விலை: ரூ. 20,25,000/- (இருபது இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்)

மின்னணு ஏலம் நடைபெறும் நாள் மற்றும் நேரம்	**23.07.2026 (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை. விற்பனை முடியும் வரை தலா ஐந்து நிமிடங்கள் நேர நீட்டிப்பு வழங்கப்படும்**
ரிசர்வ் விலை	ரூ.20,25,000/--
(EMD) (ரிசர்வ் விலையில் 10%)	ரூ.2,02,500/-
ஏலத்தொகை	ரூ.10,000/-
சொத்தினை பார்வையிடும் நாள்	**18.07.2026 (சனிக்கிழமை) முதல் (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)**
சொத்து விபரங்கள் குறித்து தொடர்புக்கு	78069 64087, 94886 80017
வங்கி கிளையில் மின்னணு விண்ணப்பம் மற்றும் முன்பணம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள்	**21.07.2026 அன்று அல்லது அதற்கு முன் மாலை 4.00 மணி வரை**

வாங்க விரும்பும் நபர்கள்/ஏலதாரர்கள், EMD தொகையை NEFT/RTGS மூலம் SBI தென்னம்பாளையம் கிளையின் கணக்கு எண்: 4897932079217, IFSC குறியீடு: SBIN0007921 என்ற கணக்கில் செலுத்த வேண்டும் அல்லது திருப்பூரில் செலுத்தத்தக்க வகையில், ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியின் பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை (டிமாண்ட் டிராஃப்ட்) மூலமாகவும் செலுத்தலாம்.

விற்பனை பற்றிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா **வீட்டுக்கடன் மையம்**, பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநர் வலைத்தளம் **www.sbi.co.in, https://bankauctions.com.** என்ற இணையதளத்தில் பார்த்துக்கொள்ளவும். மின்-ஏல சேவை வழங்குநர் **M/s. C1 இந்தியா பிரைவேட் லிமிடெட்** மின்னஞ்சல் முகவரி : **support@bankauctions.com** திரு. பிரபாகரன் 7010067800

தேதி : 06.07.2026
இடம் : திருப்பூர்.

அதிகாரம் பெற்ற அலுவலர்
பாரத ஸ்டேட் பாங்கு, வீட்டுக்கடன் மையம், திருப்பூர்

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்களா 6வது பிளாக், கோரமங்களா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: SF எண்.117, கதவு எண்.168 [3/2], UKPN காம்ப்ளக்ஸ், பழனி ரோடு, உடுமலைப்பேட்டை, தமிழ்நாடு-642126

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1189210170000017 / 1. Mr.ராதாகிருஷ்ணன் 2. Mrs.மஞ்சுளா	(I) 10.01.2025 & 01.01.2025 அன்றுள்ளபடி ₹ 12,12,288/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து பன்னிரண்டாயிரத்து இருநூற்று எண்பத்தெட்டு மட்டும்) (II) அடையாளபூர்வ சுவாதீனம் - 13.05.2025 & நேரடி சுவாதீனம் - 21.02.2026	04.07.2026 அன்றுள்ளபடி ₹ 16,81,393.76 (ரூபாய் பதினாறு லட்சத்து எண்பத்து ஒன்றாயிரத்து முன்னூற்று தொண்ணூற்று மூன்று மற்றும் பைசா எழுபத்து ஆறு மட்டும்)	₹ 16,76,000/- (ரூபாய் பதினாறு லட்சத்து எழுபத்து ஆறாயிரம் மட்டும்)	₹ 1,67,600/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து ஏழாயிரத்து அறநூறு மட்டும்)

சொத்து விவரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, நத்தம் S.F.எண்.55, **தும்பலப்பட்டி கிராமம், உடுமலைப்பேட்டை தாலுகா** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கில் 42 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் 33 அடி, வடக்கு தெற்காக கிழக்கில் 55 அடி, வடக்கு தெற்காக மேற்கில் 46 அடி **ஆக மொத்தம் 1932 சதுர அடி நிலம் அதிலுள்ள கட்டிடம்,** பொது சாலையை உபயோகிக்கும் உரிமை மற்றும் அனைத்து இதர அனுபந்தங்கள். அதன் கதவு எண்.2/48 சொத்து வரி 376 மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கருப்புசாமி-க்கு சொந்தமான வீட்டிற்கு வடக்கு, பழனி போயன் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான வீட்டிற்கு தெற்கு, காளிமுத்து, பழனிசாமி ஆகியோருக்கு சொந்தமான வீட்டிற்கு கிழக்கு, வடக்கு தெற்கு வழிப்பாதைக்கு மேற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 29.07.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
28.07.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	27.07.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : **Mr.ராம்பிரசாத் - 95009 96689 & 95666 66963 / / Mr.டீஜோ சாஜன் – 78451 92961**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன் Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:-support@bankeauctions.com, Auction portal -https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
தேதி: 07.07.2026 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

HDFC BANK

ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்

கிளை : எண்.56/3, முதல் தளம், MSRK டவர், பாரதி பூங்கா 2வது குறுக்கு, சாய்பாபா காலனி, கோயமுத்தூர் – 641 011. போன்: (0422) – 4301152, 4301153, 4301154.
CIN : L65920MH1994PLC080618, இணையதளம்: www.hdfcbank.com

சுவாதீன அறிவிப்பு

2002–ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை பத்திரப்படுத்துதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்ட ஷரத்துக்களின்படி (சொல்லப்பட்ட சட்டம்) பிரிவு 13(12)–ன் கீழ் விதி 3–ன் படி **ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்** (முன்னாள் ஹெச் டி எஃப் சி லிமிடெட், ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்டுடன், மாண்பமை NCLT மும்பையின் ஒருங்கிணைப்புத் திட்ட ஒழுங்கமைவின்படி அங்கீகரிக்கப்பட்ட 17.03.2023 தேதிய உத்தரவின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது) நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் கீழே விவரித்துள்ளபடி கடன்தாரர்(கள்)க்கு சட்டப்பிரிவு 13(2)–ன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்புகள் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் நிதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகைகளை, சம்மந்தப்பட்ட பெயர்களுக்கு எதிராக அறிவிப்புகளில் சொல்லப்பட்டுள்ள சதவீத வட்டி மற்றும் இதர செலவுகளுடன் திருப்பிச் செலுத்தக் கோரி கேட்பு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு பணிக்கப்பட்டது.

வ. எண்.	கடன்தாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி	செலுத்த வேண்டிய தொகை	கேட்பு அறிவிப்பு தேதி	சுவாதீன தேதி	அசையா சொத்து விபரம்
1.	திரு.சரவண குமார். P, த/பெ பொன்னுசாமி, கதவு எண்.32A, ராஜா வீதி, மடத்துக்குளம், திருப்பூர் – 642 113.	ரூ.13,85,477/– 30.09.2025 தேதி வரை*	05.11.2025	03.07.2026 (அடையாள சுவாதீனம்)	திருப்பூர் பதிவு மாவட்டம், கணியூர் சார் பதிவு மாவட்டம், மடத்துக்குளம் தாலூகா, சர்கார் கண்ணாடிப்புத்தூர் கிராம நத்தம் எண்.52/A1, உட்பிரிவின் பின் வார்டு எண்.5, வீதி எண்.1ல் நத்தம் சர்வே எண்.52/A1Aயில் அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் கட்டடம் சேர்ந்த சொத்து, தனலட்சுமி வீட்டின் 4 அகல கிழமேல் தடத்துக்குத் தெற்கு, பூவராகனின் மீத நிலம் மற்றும் 4 அடி அகல கிழமேல் தடத்துக்குக் கிழக்கு, கண்ணன் மற்றும் கணேசனின் நிலம் மற்றும் வீட்டுக்கு வடக்கு, பொன்னம்மாள் மற்றும் ஆறுமுகம் நிலம் மற்றும் வீட்டுக்கு மேற்கு. **அளவுகளாக** கிழமேல் இருபுறமும் 30 அடி, தென்வடல் கிழபுறம் 20 அடி, தென்வடல் மேல்புறம் 21 அடி ஆக உள்ள 615 சதுர அடி (அல்லது) 57.13 சதுர மீட்டர் நிலத்துடன் தடவழி சேர்ந்த சொத்து, மொத்தம் 665 சதுர அடி (அல்லது) 61.75 சதுர மீட்டர் உடன் பிற சாலை வசதிகள் உபயோக உரிமையுடன் பிற பயன்பாட்டுரிமைகள் சேர்ந்த சொத்து. மேலும், திருப்பூர் பதிவு மாவட்டம், கணியூர் சார் பதிவு மாவட்டம், மடத்துக்குளம் தாலூகா, சர்கார் கண்ணாடிப்புத்தூர் கிராம நத்தம் எண்.52/A1Aயில் **இனம்.1ல்** பூவராகவன் மீத நிலத்துக்குக் கிழக்கு, சரவணகுமார் நிலத்துக்கு மேற்கு, கண்ணன், கனேசன் நிலம் மற்றும் வீட்டுக்கு வடக்கு, தனலட்சுமி நிலம், 4 அடி அகல கிழமேல் தடத்துக்குத் தெற்கு, இதனுள், கிழமேல் இருபுறமும் 4 அடி, தென்வடல் இருபுறமும் 21 அடி ஆக உள்ள 84 சதுர அடி நிலம். **இனம்.2ல்** தனலட்சுமி நிலத்துக்குக் கிழக்கு, பொன்னாம்மாள், ஆறுமுகம் வீட்டுக்கு மேற்கு, சரவண குமார் நிலத்துக்கு வடக்கு, தனலட்சுமி, பூவராகவன் நிலத்துக்குத் தெற்கு. **அளவுகளாக** கிழமேல் இருபுறமும் 27 அடி, தென்வடல் இருபுறமும் 4 அடி ஆக உள்ள 108 சதுர அடி நிலம். ஆக இரண்டு இனங்களும் சேர்ந்து மொத்தம் 192 சதுர அடி அல்லது 17.84 சதுர மீட்டர் நிலமும், பிற அனைத்து தடவழி மற்றும் பயன்பாட்டுரிமைகள் சேர்ந்த சொத்து, வார்டு எண்.5ல் உள்ளது. திருப்பூர் பதிவு மாவட்டம், கணியூர் சார் பதிவு மாவட்டம், மடத்துக்குளம் தாலூகா, சர்கார் கண்ணாடிப்புத்தூர் கிராம நத்தம் எண்.52/A1Aயில் 5வது வார்டு, வீதி எண்.1ல் தென்வடல் ராஜ வீதிக்குக் கிழக்கு, இனம் எண்.1ல் ஆவண எண்.2839/2013ன் படி உள்ள சரவணகுமார் நிலத்துக்கு மேற்கு, பூவராகவன் நிலத்துக்கு வடக்கு, தனலட்சுமி வீடு மற்றும் நிலத்துக்குத் தெற்கு. **அளவுகளாக** கிழமேல் இருபுறமும் 21 அடி, தென்வடல் இருபுறமும் 10 அடி ஆக மொத்தம் 210 சதுர.அடி அல்லது 19.51 சதுர மீட்டர் நிலமும், அதில் கட்டப்பட்டுள்ள மற்றும் கட்டப்படவுள்ள கட்டடங்களுடன், பொதுத்தடவழி உபயோக உரிமைகளும், பயன்பாட்டுரிமைகளும் சேர்ந்த சொத்து.

*01.10.2025 தேதியிலிருந்து 18 சதவீத வருட வட்டி, பிற செலவுகளுடன், தொகையை திருப்பிச் செலுத்தும் காலம் வரை.

மேற்சொன்ன கடன்தாரர்(கள்) மேலே சொல்லப்பட்ட கடன் தொகையை முழுவதுமாகச் செலுத்த மறுதலிப்பதாலும், தவறியதாலும், மேலே சொல்லப்பட்ட அறிவிப்பு கடன்தாரர்(கள்)க்குக் குறிப்பாகவும், பொதுமக்களுக்கும் பொதுவாகவும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்வது என்னவெனில் சட்டப் பிரிவு 13(4)ன் படியும் மேற்படி சட்டவிதிகள் விதி எண். 8ன் படியும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலர் மேலே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்(களை) சுவாதீனம் மேற்கொண்டுள்ளார்.
கடன்தாரர்(கள்) குறிப்பாக பொதுமக்கள் மேலே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்து(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்துக்(கள்) குறித்து எந்த தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கப்படுவதுடன், அவ்வாறு மேற்கொண்டால் **ஹெச் டி எஃப் சி பேங்க்**–க்கு சேரவேண்டிய மேலே குறிப்பிட்டுள்ள தொகை, வட்டி மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்து செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்படும் என இதன் மூலம் அறிவிக்கிறார்.
பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன்தாரர்(கள்) கவனம் ஈர்க்கப்படுகிறது.

ஒம்/–
அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட்–க்காக

தேதி : 03.07.2026
இடம் : திருப்பூர்

பதிவு அலுவலகம் : ஹெச் டி எஃப் சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பபட் மார்க், லோயர் பேரல் (மேற்கு), மும்பை – 400013